**2025 ஆகஸ்ட்  மாதம் 19 – ஆம் தேதி செவ்வய்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர்        :  49 /2019**

O.S. No.: 49/2019    பெயர்: விஜயா    PW1    19.08.2025

க/பெ. சின்னமாயன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனது கணவர் சின்னமாயனுக்கும், எனக்கும் பிறந்த மகன் பெரியதம்பி என்றால் சரிதான். வள்ளி (எ) வள்ளி மயில் மற்றும் ஆனந்தி ஆகியோர் எனது பெண்மக்கள் என்றால் சரிதான். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய சொத்தை சங்கரநாராயணன், எனது மகன், என்னுடைய சம்பந்தக்காரர் ஆகியோர் சேர்ந்து மோசடி செய்துவிட்டார்கள், அதனால் அந்த சொத்து எனக்கு வேண்டும் என பரிகாரம் கேட்டுள்ளேன். வழக்குரைச் சொத்திற்கான சர்வே எண், மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் சர்வே எண்.551, விஸ்தீரணம் தெரியாது. தற்போதும் என்னை இந்நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு வாய்தாவிற்கும் அழைத்து வருபவர் எனது மகன் பெரியதம்பி தான் என்றால் சரியல்ல, நானாகவே நீதிமன்ற வாய்தாவிற்கு வருகிறேன். தனுஷ்கோடி என்பவர் என்னுடைய சம்பந்தக்காரர். அவருடைய மகளை தான் எனது மகனுக்கு திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரிதான். எனது மருமகள் பாண்டீஸ்வரியை 5 ம் பிரதிவாதியாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி முருகேஸ்வரி என்பவர் என்னுடைய சம்பந்தக்காரரின் மனைவியாவார் என்றால் சரிதான். நானும், எனது மகனும் சேர்ந்து 06.04.2005 ம் தேதி வா.சா.ஆ.2–யை சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எனது சம்பந்தக்காரர் தனுஷ்கோடிக்கு

4 ஏக்கர் 80 செண்டில் கீழ்பக்கம் 2 ஏக்கர் 40 செண்டை உரிய பிரதி பிரயோஜனம் பெற்றுக்கொண்டு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2–ல் ஒன்பது பக்கங்களில் நானும், எனது மகன் பெரியதம்பியும் கையொப்பம் செய்து, கிரையம் செய்துக்கொடுத்துள்ளோம் என்றால் அந்த கையொப்பம் என்னுடையது அல்ல. சார்பதிவாளர் முன்னிலையில் நான் கையொப்பம் செய்தும், கைரேகை வைத்தும் கிரையம் பதிந்து கொடுத்துள்ளேன் என்றால் இல்லை, நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. வா.சா.ஆ.2–ல் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் நானும், எனது மகன் பெரியதம்பியும் சேர்ந்து போட்டது என்றும், இந்த வழக்கிற்காக தற்போது நானும், எனது மகனும் கையொப்பங்கள் செய்யவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரையப் பத்திரம் குறித்து எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் 2018ம் வருடம் தான் தெரியவந்தது. தனுஷ்கோடி கிரையம் பெற்ற பிறகு அச்சொத்தை அனுபவம் செய்து வந்து, கடந்த 30.08.2007ம் தேதி தனுஷ்கோடி இந்த வழக்கின் 6ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 ல் கண்ட சொத்தை பதிவு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றும், அதனடிப்படையில் சங்கரநாராயணன் அந்த கிரையச் சொத்தை பாத்தியப்படுத்தி அனுபவம் செய்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 தனுஷ்கோடி – சங்கரநாராயணன் கிரைய பத்திரத்தில் சம்மத சாட்சிகளாக நானும், என்னுடைய பெண்மக்களான வள்ளி, ஆனந்தி ஆகியோர் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் அந்த கையொப்பங்கள் என்னுடையதும், என்னுடைய பிள்ளைகளுடையதும் இல்லை. சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் நானும், எனது பெண் பிள்ளைகளும் சங்கரநாராயணன் பெற்ற கிரையத்தை ஒப்புக்கொண்டு சம்மத

சாட்சிகளாக வா.சா.ஆ.3 பதிவு செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3ல் சம்மத சாட்சிகளாக கையொப்பம் செய்துவிட்டு வழக்கிற்காக தற்போது கையொப்பம் எங்களுடையது இல்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சங்கரநாராயணன் கிரையம் பெற்ற பிறகு அவர் பெயரில் பட்டா ஏற்பட்டு, அவர் பாத்தியத்துடன் அனுபவம் செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு அருகில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எஸ்.பி.எஸ். காலனியில் குடியிருக்கும் எனது வீட்டின் நானும், வேறு எவரும் குடியிருக்கிறோம் என்பதை காட்டுவதற்கு வாக்காளர் ஜாபிதா, ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக இருக்கிறேன். அந்த ஆவணங்களை பார்த்தால் என்னுடன் தான் எனது மகன் வசித்து வருகிறார் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான், 10 வருடங்கள் என்னுடன் வசித்து வந்து, அதன்பிறகு சண்டையிட்டு மாமனார் வீட்டிற்கு சென்றுவிட்டார். இன்றிலிருந்து 12 வருடங்களுக்கு முன்பு எனது மகன் என்னிடம் கோபித்துக்கொண்டு சென்றுவிட்டார். கீழ்பக்கம் ஏற்கனவே விற்ற 2 ஏக்கர் 40 செண்ட் நிலம்போக மேல்பக்கம் உள்ள 2 ஏக்கர் 40 செண்டை பொறுத்து சங்கர நாராயணனுக்கு கிரைய ஒப்பந்தம் போட்டு, நானும், எனது பெண்மக்களும், எனது மகனும் சேர்ந்து கிரைய ஒப்பந்தம் எழுத்கொடுத்துள்ளோம் என்றால் வட்டிக்கு கொடுத்து கடன் வாங்குவதற்காக எழுதிக்கொடுத்தேன். இது சம்பந்தமாக கிரைய ஒப்பந்தப்படி கிரையம் எழுதிக்கொடுக்க தவறியதால் சங்கர நாராயணன் வாதியாக இருந்து, என்மீதும், என் பிள்ளைகள் மீதும் தேனி, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.73/2008 என வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கில்

எங்களுக்காக வழக்கறிஞர் திரு.P.V.K. தெய்வேந்திரன் அவர்கள் ஆஜராகி எங்களுக்காக எதிர்வாதம் செய்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது, எனக்கு 2018 ம் வருடம் தான் தெரியவந்தது, எனது மகன், வக்கீல், சங்கர நாராயணன் ஆகிய அனைவரும் சேர்ந்து என்னை மோசம் செய்துவிட்டார்கள். மேற்படி வழக்கில் நீதிமன்றம் மூலம் எனக்கும், எனது மக்களுக்கும் அழைப்பாணை வரப்பெற்று, அந்த அழைப்பாணையை பெற்றுக்கொண்டோம் என்று சொன்னால் அழைப்பாணை வரவே இல்லை, எனது மகன், வக்கீல், சங்கர நாராயணன் ஆகிய அனைவரும் சேர்ந்து, அவர்களே வாங்கிக்கொண்டு, அவர்களே கையொப்பம் செய்துக்கொண்டார்கள். அந்த வழக்கில் உள்ள அழைப்பாணையை நீதிமன்றத்திற்கு வரவழைக்க நான் நடவடிக்கை எடுத்து அதனை பார்வையிட்டால், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதானா என்பது தெரியவரும் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.73/2008 வழக்கு இருதரப்பு விசாரணைக்கு பின்னர் 18.02.2010 ம் தேதியன்று சங்கர நாராயணன் அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பும், தீர்ப்பாணையும் தேனி, முதன்மை மாவட்ட நீதிமன்றத்தால் பகரப்பட்டது என்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. அந்த தீர்ப்பும், தீர்ப்பாணையை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நானும், எனது பிள்ளைகளும் மேல்முறையீடு தாக்கல் செய்து, அந்த மேல்முறையீடு A.S (MD) .No.166/2010 என எண்ணிடப்பட்டு இருந்தது என்றும், அந்த மேல்முறையீட்டு வழக்கில் நான் தான் வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. எங்களது சார்பாக T.S.முஹமது முகைதீன் என்ற வழக்கறிஞரை நியமனம் செய்து மேல்முறையீடு வழக்கை நடத்தி வந்தோம் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அந்த மேல்முறையீட்டு வழக்கில்

எங்களது சார்பில் தாக்கல் செய்துள்ள வக்காலத்து மற்றும் அப்பீல் மெமோரேண்டம் ஆகியவற்றை வரவழைத்து பார்வையிட்டால் அதில் கையொப்பம் இட்டு நாங்கள் தான் தாக்கல் செய்தோம் என்ற உண்மை தெரியவரும் என்றால் சரிதான், அந்த ஆவணங்களை வரவழைத்து அதிலுள்ள கையொப்பம் எங்களுடையதுதானா என்பதை நிரூபிக்க தயாராக உள்ளேன். மதுரை உயர்நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கும் எங்களுக்கு எதிராக 09.07.2018ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு, தீர்ப்பு பகரப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த மேல்முறையீட்டு வழக்கின் மேல் புதுதில்லி, மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் 2ம் மேல்முறையீடு நானும், எனது பிள்ளைகளும் சேர்ந்து தாக்கல் செய்யப்பட்டது என்றும், ஆனால் அந்த 2ம் மேல்முறையீடு Admission நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் நாங்கள் அங்கு செல்லவில்லை, அது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. மேற்படி விபரங்கள் 6ம் பிரதிவாதி தரப்பில் எதிருரையில் தெரிவித்திருந்தும், நாங்கள் மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதை நிரூபிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் எனது வழக்கறிஞரிடம் சொல்லி அனுப்பினேன், அவர்கள் திருப்பி அனுப்பவில்லை. எனது மகன் பெரியதம்பி முதலில் மதுரையில் வங்கியில் வேலை பார்த்தார். எனது வழக்குரையில் எனது கணவர் இறந்தபிறகு, எனது மகன் பெரியதம்பியும், அவரது மாமனார் தனுஷ்கோடி அவர்களும் சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றதாக சொல்லியுள்ளதில், எப்பொழுது அழைத்து சென்றார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் எனது மகனும், சம்பந்தக்காரரும் அடமானம் வைத்து கடன் வாங்குவதற்காக என் கையொப்பம் தேவைப்படுவதாக கூறி சில

ஆவணங்களில் கையொப்பம் கேட்டார்கள், என் மகன் மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் நான் கையொப்பம் செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கையொப்பம் செய்த உடனே அந்த ஆவணங்கள் என்ன ஆவணங்கள் என்பதை தெரிந்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் படிக்கவில்லை, எனது பெண்பிள்ளைகளும் படிக்கவில்லை, அதனால் நடவடிக்கை எடுக்கவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது பெண்பிள்ளைகள் தான் உதவிகரமான இருந்து செயல்பட்டு வருகிறார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இரண்டு வருடங்கள் கழித்து மீண்டும் என்னை சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று தொழில் நிமித்தம் காரணமாக தேவைப்படுவதாக கூறி தனது மகனின் வேண்டுக்கோளுக்கிணங்க சில முத்திரைத்தாள்களிலும், சில பேப்பர்களிலும் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்துக்கொடுத்த விபரத்திற்கு என்ன ஆவணம் தயாரிக்கப்பட்டது என்ற விபரத்தை தெரிந்துக் கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. நான் முதலாவதாக கையொப்பம் செய்துக்கொடுத்தது வா.சா.ஆ.2 ஆவணத்திற்காக என்றும், அதற்கடுத்து கையொப்பம் செய்துக் கொடுத்தது வா.சா.ஆ.3 ஆவணத்திற்காக என்றும் சொன்னால் சரியல்ல, எனது மகன் கடன் வாங்க கேட்டதால் நான் வெற்றுத்தாளில் கையொப்பம் செய்து கொடுத்தேன். நான் சார்பதிவாளர் அலுவலத்திற்கு சென்று வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் கையொப்பம் செய்துக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. கீழ்பக்கம் 2 ஏக்கர் 40 செண்ட் நிலத்திற்கு சங்கர நாராயணன் பெயரில் தான் பட்டா ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. தற்போது மொத்த சொத்தில் கீழ்பக்கம் உள்ள 2 ஏக்கர் 40 செண்ட் நிலம் மற்றும் அதற்குரிய கிணறு

பாத்தியம் உட்பட சங்கர நாராயணன் பெயரில் தான் அனுபவமும், உரிமையும், பட்டாவும் உள்ளது என்றால் இல்லை. 2 ஏக்கர் 40 செண்ட் நிலம் என் பெயரில் தான் பட்டா உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் எனது மகன் பெரியதம்பியும், அவரது மனைவி பாண்டீஸ்வரியும் என்னுடன் சண்டையிட்டு வெளியே தனியே சென்றுவிட்டதாக கூறியுள்ளது என்பது பொய் என்றும், தற்போது வரை என்னுடன் தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, எனது கணவர் இறக்கும்வரை என்னுடன் தான் வசித்து வந்தார், அதன்பிறகு சண்டையிட்டு சென்றுவிட்டார். எனது கணவர் இறக்கும்வரை என்னுடன் தான் வசித்து வந்தார் என்றும், அதன்பிறகு சண்டையிட்டு சென்றுவிட்டார் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பெண்பிள்ளைகள் தான் எனக்கு உரிய சவரட்சணைகள் செய்து வந்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மகள்கள் பாகம் கேட்டு தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.93/2016 என வழக்கு சொத்தை பொறுத்து என்மீதும், சங்கரநாராயணன், தனுஷ்கோடி, ஜெயச்சந்திரன், பெரியதம்பி, தெய்வம், ஜெயமணி ஆகியோர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இடைமனு எண்.644/2018-ல் (Order 7 Rule 11 CPC) -ன்படி மனுத்தாக்கல் செய்து, இருதரப்பு விசாரணைக்கு பின்னர் மனுதாரர் சங்கரநாராயணன் தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு, எனது பெண்பிள்ளைகள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, 31.07.2019 ம் தேதி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டது என்றும், அதன்மீது எனது பெண்பிள்கைள் தேனி சார்பு

நீதிமன்றத்தில் A.S.No.40/2019 என மேல்முறையீடு தாக்கல் செய்து, எனது பெண்பிள்ளைகள் மேற்படி மேல்முறையீட்டு வழக்கில் சரியாக ஆஜராக காரணத்தினால் 18.03.2022 ம் தேதி தள்ளுபடி செய்து உத்தரவு ஏற்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த கீழமை நீதிமன்றத்தில் சங்கரநாராயணனுக்கு தனுஷ்கோடி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் சம்மத சாட்சிகளாக நானும், எனது பெண்மக்களும் கையொப்பம் செய்து, ஒத்துக்கொண்டதன் அடிப்படையில் பெண்மக்கள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விபரம் எனது பெண்மக்கள் மூலமாக தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். (சம்மத சாட்சிகளாக கையொப்பம் போட்டதின் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக வினா எழுப்பப்பட்டது, வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்படுகிறது). நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் என்னுடைய மகள்கள் எனக்கு உறுதுணையாக இருந்தபோது, முதலாவதாக நான் கையொப்பம் செய்ததாக சொல்லக்கூடிய தாள்கள் தான் வா.சா.ஆ.2 என்றும், அதன்பின்பு தனுஷ்கோடி சங்கரநாராயணனுக்கு எழுதிக்கொடுத்தது வா.சா.ஆ.3 என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி விபரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்று சொன்னால் ஞாபகமில்லை. எனக்கு ஏற்கனவே வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணத்தில் கிழக்குப்பக்கம் 2 ஏக்கர் 40 செண்ட் கிரையம் செய்த விபரமும், அதனை அடுத்து மேற்கு பக்கம் 2 ஏக்கர் 40 செண்ட் பொறுத்து சங்கர நாராயணனுக்கு கிரைய ஒப்பந்தம் மூலம் போடப்பட்டு, அதனடிப்படையில் பெற்ற நீதிமன்ற தீர்ப்பாணைகள் மூலமும், சங்கர நாராயணனுக்கு பாத்தியம் உண்டு என்பது எங்களுக்கு நேரடியாக அந்த ஆவணம் ஏற்பட்ட தேதியிலேயே தெரியும் என்றால் தெரியாது. தேனி மாவட்ட நீதிமன்றத்தில் பெற்ற அசல் வழக்கு

எண்.73/2008 வழக்கிலும், அதனை தொடர்ந்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கிலும் பெற்ற தீர்ப்பாணையின் அடிப்படையில் நிறைவேறுதல் மனு எண்.147/2010 நீதிமன்றம் மூலம் கிரையம் பத்திரம் எழுதித்தர மனுத்தாக்கல் செய்து, சமூக நீதிமன்றமும் 12.07.2019 ம் தேதியன்று சங்கர நாராயணன் பெயருக்கு கிரைய பத்திரமும் பதிவு செய்து கொடுக்கப்பட்டது என்ற விபரமும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியாது. நான் நிறைவேறுதல் நடவடிக்கைகள் அனைத்திலும் கட்சிக்காரராக இருந்து, அதனை எதிர்க்கொண்டு, நடத்தி வந்ததால், எனக்கு அந்த நிறைவேறுதல் மனுவின் நடவடிக்கைகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்றால் தெரியாது. இ.பி.147/2010 நிறைவேறுதல் மனுவில் சமூக நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, அதனை நான் பெற்று நான் ரகு என்ற வழக்கறிஞரை நியமித்து எதிர்வழக்காடி வந்துள்ளேன் என்றால் இல்லை. அந்த விபரமும் நிறைவேறுதல் மனு நடவடிக்கையிலேயே இருக்கிறது என்றால் சரியல்ல. நான் அனைத்து வழக்குகளையும் எனது மகனுடன் சேர்ந்து வழக்காடி தற்போது, எந்த விபரமும் எனக்கு தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிறைவேறுதல் நடவடிக்கையில் சங்கர நாராயணன் சொத்தை ஒப்படைப்பு பெற நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து, நீதிமன்ற உத்தரவுப்படி ஒப்படைப்பு பெற உத்தரவு ஏற்பட்டுள்ள விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் தெரியாது. நீதிமன்ற ஒப்படைப்பிற்காக அமீனா மொத்த சொத்தின் மேற்கு பகுதிக்கு வந்தபோது, எனக்கு நேரடியாக ஒப்படைப்பு விபரம் பற்றி எனக்கு தெரியும் என்றால் தண்ணீர் கட்டியவர்கள் வந்து சொன்னார்கள், நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொல்லிவிட்டேன், அவர்கள் வந்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது.

அதன்பிறகு நீதிமன்ற அமீனா ஒப்படைப்பு செய்வதற்காக வந்த பிறகு அதனை தடை செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன், அவர் நடவடிக்கை எடுத்தார். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணத்திற்கு சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து 01.01.1987 முதல் நாளது தேதிவரை உள்ள வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் கேட்டு தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் வழக்குரையில் சொல்வதுபோல் சங்கர நாராயணனுக்கும், எனது மகனுக்கும், எனது சம்பந்தக்காரர் தனுஷ்கோடிக்கும் வழக்குச் சொத்து குறித்து கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக எவ்விதமான தொடர்பும் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல, அந்த மூன்று நபர்கள் சேர்ந்து தான் மோசடி செய்தார்கள். மேற்படி விபரத்தை நிரூபிக்க நான் காவல் நிலையத்தில் புகாரோ, குற்றவியல் நீதிமன்றத்தில் ஏதாவது வழக்கோ என் மூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சங்கர நாராயணனுக்கு நான் தாக்கல் செய்த வழக்கு மூலம் அதிகமான மன உளைச்சலும், அடிக்கடி பிரச்சனையும் செய்து வந்ததால் அதிகமான செலவுத் தொகையுடன் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.08.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.19 18:31:34 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
19.08.2025.